

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மேலும் கோவில்பட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவில்பட்டி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் அன்னதானத்தை தொடங்கி வைத்தார் உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான திருமிகு பெ. கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,நகரச் சேர்மன் கா.கருணாநிதி, கூடுதல் ஆட்சியர் தாக்கரே சுபம் ஞானதேவராவ், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் பீக்கிலிப்பட்டி முருகேசன், இராதாகிருஷ்ணன் மற்றும் திரளாக பொது மக்கள், தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு “உடலை நலமாக்குவோம்! உயிரை நலமாக்குவோம்!” எனும் தலைப்பில் மாபெரும் மருத்துவ முகாமிற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க.வினோத் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக மருத்துவ அணிச் செயலாளர் நா.எழிலன் மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மத மோதல்களை உருவாக்கிட

# களமிறங்கி விட்டார்கள் கோயபல்சுகள்... எச்சரிக்கை!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜி.ராமகிருஷ்ணன் அறிக்கை!

சென்னை, ஜூன் 12–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜி.ராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

பல மாநிலங்களில் சங்பரிவார அமைப்புகள் வதந்திகள் மூலம் பல மத மோதல்களை உருவாக்கி இருக்கின்றன. மக்கள் ஒற்றுமையைப் பாதுகாத்திட மேலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் இது.

கடந்த 02.06.2023 அன்று ஒடிசா மாநிலத்தில் பகாநகரில் நடந்த ரயில் விபத்தில் 288 பேர் மரணம். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றனர். உலகமே அதிர்ச்சிக்குள்ளானது. ரயில்வே பாதுகாப்பு ஆணையம் தனது விசாரணையை துவங்குவதற்கு முன்னதாகவே இந்த கோர ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ஒன்றிய மோடி அரசு உத்தரவிட்டது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி தனது டிவிட்டர் பகுதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்: ”எந்தவொரு ரயில் விபத்தையும் முதலில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர்தான் விசாரிக்க வேண்டும் என்பது ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிலையில் அந்த விசாரணை நடப்பதற்கு முன்பே சி.பி.ஐ. விசாரணை நடைபெறும் என ஒன்றிய அரசு அறிவித்திருப்பது இந்த விபத்துக்கு ஒரு கிரிமினல் வடிவம் கொடுப்பதற்கான முயற்சியே ஆகும்.

மேலும், ”ஒடிசா ரயில் விபத்து நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்திய ரயில்வேயின் உண்மையான நிலை என்ன என்பது குறித்து மிக விரிவான அறிக்கையை ரயில்வே வாரியம் ஒன்றிய அரசுக்கு சமர்ப்பித்திருக்கி றது என்பதையும் சுட்டிக்காட்டி சீத்தாராம் யெச் சூரி விவரித்துள்ளார். மோடி தலைமையிலான ஒன்றிய அரசு இப்படி என்றால், பா.ஜ.க.வை சேர்ந்த சிலர் பால சோரில் நடந்த விபத்திற்கு வகுப்புவாத வண்ணம் பூசத் துவங்கிவிட்டனர். ”280 மக்களைக் கொன்று, 900 மக்களை படுகாயம் அடையச் செய்த இந்த மனித உரு விலான காட்டேரி பெயர் அகமது ஷெரீப் . ஒடிசாவின் பகானகா ரயில் நிலையத்தில் சரக்கு ரயில் நின்று கொண்டிருந்த லூப் லைனுக்கு எக்ஸ்பிரஸ் ரயில் செல்ல சிக்னல் தந்த மாபாவி இவன். விபத்து குறித்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதிலிருந்து அகமது ஷெரீப் தலைமறைவாக உள்ளார். பாலசோரின் கொடூரமான



ரயில் விபத்தின் முக்கியக் குற்றவாளி இவர். இப்போது தலைமறைவாக உள்ளார். இவரைப் பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடந்து வரு கிறது.

இது சமூக வலைதளத்தில் பரவிய போது பலர் இப்பதிவை பகிர்ந்தனர். உண்மைத் தன்மையை கண்டறியும் ஆல்ட் நியூஸ் என்ற சமூக வலைதள நிறுவனம் மேற்கண்ட பதிவின் உண்மை தன்மை குறித்து ஆய்வு செய்து, அகமது ஷெரீப் என்ற ஒருவர் ரயில்வே பணியில் இல்லை என்பதை கண்டறிந்து தனது வலைதளத்தில் பதிவு செய்துள்ளது. மேற்கண்ட தவறான பதிவை சமூக வலை தளத்தில் பகிர்ந்த ஓய்வு பெற்ற ரயில்வே தொழிலாளி (தென்னிந்திய ரயில்வே) ஒருவருக்கு சி.ஐ.டி.யு. தட்சிண ரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் தலைவர்களில் ஒருவராக பணியாற்றிய ஆர். இளங்கோவன், குறுஞ்செய்தி அனுப்பி அந்த பதிவை நீக்கும்படி கேட்டுக் கொண்டார். சம்பந்தப்பட்டவரும் பதிவை நீக்கிவிட்டார். ஆனால் மேற்கண்ட தவறான பதிவு ஏராளமானவர்களுக்கு ஏற்கனவே சென்றுவிட்டது.

மேலும் ‘ராண்டம் இந்தியன்’ என்ற ஒரு டிவிட்டர் பதிவாளர், விபத்து நடந்த பகுதியை டிரோன் கேமரா மூலம் எடுக்கப்பட்ட ஒரு படத்தை தன்னுடைய சமூக வலைதளத்தில் பதிவிட்டு, விபத்து நடந்த பகுதிக்கு அருகில் ஒரு மசூதி இருப்பதாகவும், இதன் மூலம் விபத்துக்கும், இஸ்லாமியர்களுக்கும் தொடர்பு இருக்கும் என்றும் ஒரு பொய்யான கருத்தை வலைதளத்தின் மூலம் விதைத்தார். இன்னொரு உண்மை தன்மையை அறியும் சமூக வலைதள நிறுவனம் இதுகுறித்து ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட படத்தில் உள்ளது மசூதி அல்ல, அது பகானகாவில் உள்ள இஸ்கான் கோவில் என்று கண்டறிந்து உண்மை வெளியிட்டுவிட்டது. இஸ்லாமியர்கள் தான் பாலசோரில் நடந்த ரயில் விபத்துக்கு காரணம் என்று பொய்யான தகவலை சமூக வலைதளத்தில் பரப்பி மக்களை நம்ப வைக்க பா.ஜ.க. தலைமையிலான சங் பரிவார அமைப்புகள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. இத்தகைய வேலையைத்தான் ஜெர்மனி யில் ஹிட்லர் தலைமையிலான அமைச்சரவை யில் இடம் பெற்றிருந்த கோயபல்சும், கோயரிங்கும் செய்து கொண்டிருந்தனர். இந்தியாவில் கோயபல்ஸ் பாணியில் சங் பரிவார அமைப்புகள் தொடர்ந்து பொய்யான தகவல்களையும், அறிக்கைகளாகவும் சமூக வலைதளப் பதிவுகளாகவும் வெளியிட்டு மத ரீதியில் மக்களை பிளவுபடுத்துவதோடு மத மோதலையும் உருவாக்கி வருகின்றன.

தமிழ்நாட்டில், பாரதிய ஜனதா கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்டத் துணைத் தலைவராக இருந்த மாரிமுத்து, கடந்த 2017ஆம் ஆண்டு தூக்கில் சடலமாகத் தொங்கினார். கைகள் கட்டப்பட்டு வாயில் துணி வைத்து அடைக்கப்பட்ட அவரது சடலத்துக்கு அருகிலேயே மோடி படத்துக்கு செருப்பு மாலை அணி விக்கப்பட்டு பா.ஜ.க. கொடியும் அவமரியாதை செய்யப்பட்ட நிலையில் இருந்தது. அத்துடன் 1, 2, 3, 4, 5 என எண்கள் குறிப்பிடப்பட்டு 3 என்ற எண் அடிக்கப்பட்டிருந்தது. இந்த காட்சியை வைத்து, பா.ஜ.க. தலைவரை எதிரிகள் கொலை செய்து விட்டனர்; மேலும் பல பா.ஜ.க. தலைவர்களை கொலை செய்வ தற்குத்தான் எண்களைப் பட்டியலிட்டுள்ளனர் என்றும் அக்கட்சியினர் பிரச்சாரம் செய்தனர். அப்போதைய பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் திருப்பூருக்கு வந்து பா.ஜ.க. தலைவர்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருவதாகவும் பேட்டியளித்துச் சென்றார். ஆனால் காவலர்கள் புலன் விசாரணை செய்ததில், குடும்ப காரணத்திற்காக மாரிமுத்து தற்கொலை செய்து கொண்டதும், பா.ஜ.க.வினர் அவரது சடலத்தை வைத்து அரசியல் நாடகம் ஆடியதும் அம்பலமானது. உண்மை அம்பலமான நிலையில், மத ரீதியாக இருதரப்பு மோதல் ஏற்படுத்த பா.ஜ.க. எடுத்த முயற்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலை யீட்டினால் தடுக்கப்பட்டது. நாடு முழுவதும் பல மாநிலங்களில் சங் பரி வார அமைப்புகள் இத்தகைய வதந்திகள் மூலம் பல மத மோதல்களை உருவாக்கி இருக் கின்றன. மக்கள் ஒற்றுமையைப் பாதுகாத்திட மதச்சார்பற்ற சக்திகள் மேலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் இது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பா.ஜ.க.வின் 9 ஆண்டு கால ஆட்சியில்

# இந்தியாவின் கடன் ரூ.155 லட்சம் கோடியாக அதிகரிப்பு!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 12-*

*பா.ஜ.க.வின் 9 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் கடன் 3 மடங்காகி ரூ.155 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டி உள்ளது.*

*பிரதமர் மோடியின் தலைமையிலான 9 ஆண்டு கால ஆட்சியில் எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளதாக பா.ஜ.க. கூறுகிறது. இந்தச் சாதனைகளைப் பொதுமக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க அந்தக் கட்சி ஒரு மாத கால பிரச்சார இயக்கம் நடத்தி வருகிறது. ஆனால் காங்கிரஸ் கட்சி நேர்மாறான ஒரு முக்கிய குற்றச்சாட்டை முன் வைக்கிறது. 9 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் நாட்டின் கடன் 3 மடங்கு பெருகி, ரூ.155 லட்சம் கோடியாக அதிகரித்து இருக்கிறது என அந்தக் கட்சி கூறுகிறது.*

*இதையொட்டி காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனேட், டெல்லியில் நிருபர்களிடம் கூறியதாவது:*

*நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு காரணம், மோடி அரசின் 9 ஆண்டுகால தவறான பொருளாதார நிர்வாகம்தான். 2014ஆம் ஆண்டு மோடி அரசு பதவி ஏற்றது தொடங்கி நாட்டின் கடன்களில் இதுவரையில் ரூ.100 லட்சம் கோடியைச் சேர்த்து வைத்துள்ளது. குஜராத் முதலமைச்சராக மோடி இருந்தபோது அரசியல் அரங்கின் மறுமுனையில் இருந்தவர்களை, ஆற்றல் இல்லாதவர்கள், திறமையற்றவர்கள், ஊழல் வாதிகள் என்றெல்லாம் குற்றம் சாட்டினார். அந்த வார்த்தைகள் இன்றைக்கு வேறு எவரையும் விட அவருக்கும் அவரது அரசுக்கும் பொருந்தும்.*

*இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை அழித்த பின்னர், மிகப்பெரிய அளவில் வேலையில்லா திண்டாட்டத்தையும், விண்ணைத்தொடும் விலைவாசி உயர்வையும் மோடி அரசு உருவாக்கி இருக்கிறது. இந்தியாவின் கடனில் ரூ.100 லட்சம் கோடியை மோடி அரசு சேர்த்திருப்பது நினைத்துப் பார்க்க முடியாதது. இந்தியாவின் கடன் 2014ஆம் ஆண்டு ரூ.55 லட்சம் கோடிதான். தற்போது அது ரூ.155 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. 67 ஆண்டுகளில், 14 பிரதமர்களின் கீழ் நாடு இருந்தபோது, அதன் கடன் ரூ.55 லட்சம் கோடிதான். ஆனால் மோடி அரசின்கீழ் மட்டுமே ரூ.100 லட்சம் கோடி கடன் கூடுதலாக சேர்ந்துள்ளது.*

*‘பொருளாதார நிர்வாகம் என்பது பத்திரிகைகளில் தலைப்புச்செய்தி வர வைப்பது போன்றதல்ல. டெலிபிராம்ப்டர் கருவிகள் வாயிலாகவோ அல்லது நிச்சயமாக வாட்ஸ் அப் வாயிலாகவோ பொருளாதாரத்தை நிர்வகித்து விட முடியாது. பொருளாதார பாதிப்பு மோசமாகிக் கொண்டே செல்வதால், நாட்டின் பொருளாதார நிலை குறித்து மோடி அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! எம்.சரவணன் ஏற்பாட்டில்

# மாதவரம் தெற்கு 32வது வட்டத்தில் அறுசுவை உணவு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்கினார்! ஜி.துக்காராம் - எஸ்.நந்தகோபால் பங்கேற்பு!

*சென்னை, ஜூன் 12-*

*சென்னை வட கிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 32வது வட்டத்தில் முத்தமிழ், அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏழை எளியோருக்கு பிரியாணி வழங்கும் விழா நடைபெற்றது.*

*இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தும் ஏழை எளிய மக்களுக்கு பிரியாணியும் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியை 32-வது வட்ட கழக செயலாளர் எம். சரவணன் ஏற்பாடு செய்து இருந்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மாதவரம் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால் எம்.சி., மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை, டி.சுந்தரம், பகுதி நிர்வாகிகள் திருமதி தேவி கௌதமன், டி.ரமணன், எம்.செல்வம், ஏ.விஜயலட்சுமி, ஆனந்த், வட்ட கழக நிர்வாகிகள் கே. பத்மநாபன், கௌதம் பாலாஜி, ஆர்.தேவன், எஸ்.ஹேமாவதி, எம்.சேகர், சி.எல்.உதயக்குமார், ஜே.நரசிம்மன், வி. கௌதமன், எம்.ஹரிபாபு, ஆர்.ஸ்ரீதரன், எஸ்.என். கோதண்டன், ஆர்.எஸ்.ரவிச்சந்திரன், ஆர்.சுந்தர்ராஜ், எஸ். கே. அன்பழகன், இ.ராமச்சந்திரன், ஆர்.முருகன், ஆர்.கேதர்நாத் எஸ்.வீரமணி, சி.மாரிமுத்து, சி.மாரி ஆனந்த், எம்.செல்வி, பி.பானுமூர்த்தி, முல்லை ஆறுமுகம், ஆர்.எஸ்.மணி, வி.கோபிநாத், ஏ.ஆனந்த கண்ணன், எஸ்.ரஜினிசுரேஷ், ஜி.முருகானந்தம், எல்.ஐ.சி. வேலு, டெய்லர் சீனு, என்.கார்த்திக், எஸ். வேலு, இ.சிவகுமார், ஆர்.உமாபதி, எம்.வெங்கடேசன், எஸ். காஞ்சனா, எஸ்.செல்வம், எம். கற்பகம், ஆர்.ரவிச்சந்திரன், ஆர்.கமலக்கண்ணன், ஏ. பாலாஜி, எம்.ரமேஷ், பி.பி.உதயகுமார், டி.ரமேஷ், வி.புருசோத்தமன், ஆர்.மூர்த்தி, டி.முரளிகிருஷ்ணா, பி.ராஜ்குமார் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

**ஜூன் 12 (2016)**



**வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.**

**கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் “தாடிக்காரர்’என அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கலைஞர் நூற்றாண்டு விழா! ஜெ.அன்பழகன் நினைவு நாளை முன்னிட்டு

# 134 அ வட்டத்தில் சிவராமன் நற்பணி மன்றம் சார்பில் நல உதவிகள்!

## மயிலை த.வேலு- ஜெ.கருணாநிதி பங்கேற்பு! விவேகானந்தன் தலைமை! நந்தகுமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

*சென்னை,ஜூன்.12-*

*கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் ஜெ.அன்பழகன் நினைவுநாளை முன்னிட்டு 134 அ வட்டத்தில் எஸ்.ஆர். சிவராமன் நற்பணி மன்றம் சார்பில் நல உதவிகள் வழங்கும் விழா ராமகிருஷ்ணாபுரம் தம்பையார்ரெட்டி சந்திப்பில் இன்று (12.06.2023 திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் எஸ்.ஆர். விவேகானந்தன் தலைமையில் நடைபெறுகிறது.*



சவுதி அரேபியா அபகாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவின் தொடக்கமாக சவுதி அரேபியா என்.ஆர்.டி.ஐ.ஏ. அபஹா தென்மண்டலம் சார்பாக அதன் அமைப்பாளர் முருகதாஸ் தலைமையில் நிர்வாகிகள் டேவிட், கமலஹாசன், இஸ்மாயில், தயா செபஸ்ட்டின், கணேசன் ஆகியோர் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் சவுதி கமிஷ் சிவில் மருத்துவமனையில் இரத்ததானம் வழங்கப்பட்டது. இரத்ததான ஏற்பாடுகளை மருத்துவர் செல்வகுமார் முன்னின்று நடத்தினார். இரத்ததானம் வழங்குவதில் ஆர்வமுடன் திரளானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து கமிஷ் அப்ஸரா உணவகத்தில் அறுசுவை உணவும் வழங்கப்பட்டது.

*எஸ்.ஆர். சிவபகவான், இரா.முகுந்தன், சென்னை தெற்மேற்கு மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு அமைப்பாளர் ஜெ.எஸ். ஆர். ஜெகன் ராஜ், எம்.சுதாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*பி.டி.சி. கணபதி, இரா. குமரவேல், வெல்டர் கோதண்டம், பாஸ்கர், கோ.அர்ஜுனன், ஏ.சிமியோன் ராஜா, பி.ஜி.ராஜு, ஆர். லோகேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் நலஉதவிகளை வழங்குகிறார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் ஆட்டோ ஜெயசங்கர், ஆர். பாலசுப்ரமணியம், எஸ். பி.ஜெயசங்கர், பெரியசாமி, பி.கோபி, கே. ஜீவாதாஸ், ஐயர் குருஜீ, கே. செந்தமிழ்ச்செல்வன், புர்த. தமிழ், பி. ரமேஷ், புதர்பெ. அஜீத், கே. மோகன், பா. முரளி, ஆட்டோ கர்ணா, வி. ராமு, கே. சுந்தர்வாசு, பி.டி.சி. முருகன், இரா. செல்வம், எம்.பார்த்தசாரதி, பி. ராகுல், வெங்கடசுப்ரமணியன் கே.கல்பனா, க. கோமதி ரமேஷ், ஜெயஸ்ரீ, ஜி. விசாலாட்சி, ஏ. தேவி, எஸ்.அமுதா, ஆர்.கோமதி, வி.ருக்குமணி, எஸ்.செண்பகவள்ளி, வசுமதி, எஸ். தேவி, ஏ.கஸ்தூரி, மகேஸ்வரி, தமிழ்ச்செல்வி, மாலதி, தரணி. பி.பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

*கே.லட்சுமிகாந்தன், ஆட்டோர் கே.மூர்த்தி, ஆர்.மோகன், எஸ்.தமிழா, மார்க்கெட் புலி ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.*

*முன்னாள் தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி பொருளாளர் பி.ஜி. நந்தகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டை செய்துள்ளார்.*